மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ (16-5-2012) புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

16-5-2012 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-5-2012) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

71. வணிக வரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 24-1-2012-ஆம் நாளிட்ட 16 ஆம் எண் அரசாணையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு வணிகர், சென்னை-600034, திருவாளர்கள் தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி அமைப்புக்கு, இரத்தத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவையான மருந்துகள், மருத்துவக் கருவிகள் அல்லது மருத்துவச் சாதனங்கள் மற்றும் துணைக் கருவிகள் ஆகியவற்றின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து

வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

270. மானியக் கோரிக்கை எண்38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

271. மானியக் கோரிக்கை எண்38-பொதுத் (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

272. மானியக் கோரிக்கை எண்16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

273. மானியக் கோரிக்கை எண்36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

274. மானியக் கோரிக்கை எண்50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

275. தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012-2013. (தமிழ்)

276. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012-2013. (தமிழ்)

* * *